# இந்தியத் துணைத் தூதரகம்
யாழ்ப்பாணம்

**ஊடக அறிக்கை**

*யாழ் இந்தியத் துணைத் தூதரகத்தின் 2.2 இலட்சம் இலங்கை ரூபாய் நிதி உதவியுடன் இலங்கை சர்வோதய நிறுவனம் மகாத்மா காந்தியின் 72வது நினைவு தினத்தினை முன்னிட்டு நடாத்திய போதைப்பொருள் பாவனைக்கு எதிரான நடைபவனி இன்று (30.01.2020 வியாழக்கிழமை) நடைபெற்றது.*

*2. காலை 10.30 மணிக்கு அரியாலை காந்தி சனசமூக நிலையத்தில் அமைந்துள்ள காந்தி சிலைக்கு மலர் அஞ்சலி செலுத்தி அங்கிருந்து தொடங்கப்பட்ட நடைபவனியானது யாழ்ப்பாணம் கார்கில்ஸ் சதுக்கத்தில் அமைந்துள்ள காந்தி சிலை முன்றலில் நிறைவடைந்தது.*

*3. மததலைவர்கள் வடமாகாணசபை அவைத்தலைவர் சீ.வீ.கே சிவஞானம், பாராளுமன்ற உறுப்பினர் சித்தார்த்தன், யாழ் மாநகரசபை முதல்வர் இமானுவேல் ஆர்னோல்ட், முன்னாள் மாகாணசபை உறுப்பினர் கஜதீபன், பேராசிரியர் சண்முகதாஸ், காவல்துறை அதிகாரிகள், சர்வோதய உறுப்பினர்கள், காந்தி சேவாசங்க உறுப்பினர்கள், அரியாலை சனசமூக உறுப்பினர்கள், ஊடகவியலாளர்கள், தூதரக அலுவலர்கள், காந்தீயவாதிகள் மற்றும் பொதுமக்கள் என ஐநூறுக்கும் மேற்பட்டவர்கள் நிகழ்வில் கலந்து கொண்டனர்.*

*4. மகாத்மா காந்தியின் திருவுருவச்சிலைக்கு மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தியதைத் தொடர்ந்து இந்தியா கோர்னர் இசைத்துறை மாணவர்களால் மகாத்மா காந்திக்கு பிடித்தமான பாடல்கள் பாடப்பட்டது. அதனைத் தொடர்ந்து அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தினரால் காந்தீயம் பத்திரிகை வெளியிடப்பட்டது. அதனை யாழ் இந்தியத் துணைத் தூதுவர் சங்கர் பாலச்சந்திரன் அவர்கள் பெற்றுக்கொண்டார்.*

*5. நிகழ்வுடன் தொடர்புடைய புகைப்படங்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.*

***

*யாழ்ப்பாணம்*
*30. ஜனவரி 2020*